THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Thursday, the 26th April 1962.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, Speaker (the Hon. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Co-operative spinning mills

*** 7 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—**

(*a*) whether there is any proposal to establish a co-operative spinning mill at Tirupathur in the Ramanathapuram district; and

(*b*) if so, when?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) The Government are examining the possibilities of setting up a few co-operative spinning mills in this State during the Third Five-Year Plan period. An application for grant of a licence to set up a co-operative spinning mill at Tiruppattur has been received and it will be also considered before a final decision is taken.

SRI S. MADHAVAN : கிழக்கு ராமநாதபுரம் பின்கங்கிய பகுதியாக இருப்பதால், இப்போது அங்கு கூட்டுறவு ஸ்பின்னிங் மில்லை நிறுவுவதற்கு கனம் அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : இது ஒரு பின் தாங்கிய பகுதி என்ற காரணத்தினால்தான் ஒரு தாலுகாவில் ஒரு ஆலையைக் கொடுப்பதற்கு இருக்கிறோம். கூட்டுறவு ஆலையை எங்கே அமைப்பது என்பது பரிசீலனை செய்யவேண்டிய விஷயம்.

SRI V. S. S. MANI : நமது மாநிலத்திலே எத்தனை நூற்பாலைகள் இருக்கின்றன?

THE HON. SRI R. VENKATARAMAN : நமது மாநிலத்திலே மொத்த நூற்பாலைகளின் எண்ணிக்கை 136.

SRI T. L. SASIVARNA THEVAR : கிழக்கு ராமநாதபுரம் பகுதியிலுள்ள முதுகுளத்தூரில் ஒரு நூற்பாலை வைக்கப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா?

THE HON. SRI R. VENKATARAMAN : பக்கத்தில் பரமக்குடியில் ஒரு நூற்பாலை வைத்திருக்கிறோம்.

SRI M. KALYANASUNDARAM : முந்திய சட்டசபையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நூற்பாலை வைக்கப்படும் என்று தொழில் அமைச்சர் கூறினார். அதே அடிப்படையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? அதற்குப் போதுமான அளவு ஸ்பிண்டில்கள் ஒதுக்குவதற்கு மத்திய அரசாங்கம் ஒத்துக் கொண்டதா ? அப்படியானால் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு கூட்டுறவு நூற்பாலை வைக்கப்பட வேண்டும் என்பது தான் சர்க்காரின் லட்சியம். அதற்கான எல்லாவிதமான நடவடிக்கையையும் சர்க்கார் எடுக்கும்.

SRI A. THANGAVELU : ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை வைக்கவேண்டுமென்று திட்டம் இருக்கும் போது, பின்தங்கிய பகுதியான திண்டிவனதிலே ஒரு நூற்பாலை வைக்க அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI R. VENKATARAMAN : கோவை ஜில்லாவிலே ஒரு நூற்பாலை இல்லையென்றால், அது பின்தங்கிய பகுதி யென்றால் அதை உலகமே ஒத்துக்கொள்ளாது. ஆகையால் இந்த இடத்தில் கூட்டுறவு ஆலை வருமா என்று சொல்வதற்கில்லை.

SRI K. R. SAMBANDAM : இந்த நிதி முறை ஆண்டிலே எத்தனை நூற்பாலைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன? எந்தெந்த மாவட்டத்திலே என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : 75 ஆயிரம் ஸ்பிண்டில்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. எந்த இடத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை பரிசீலனை செய்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Is the Spinning Mill to be set up at Tiruttani—a co-operative mill or a private mill?

THE HON. SRI R. VENKATARAMAN : திருத்தணியில் நிறுவப்படும் மில் பிரைவேட் மில்.

SRI A. K. SUBBIAH : 75 ஆயிரம் ஸ்பிண்டில்கள் போதுமானதுதானா ?

THE HON. SRI R. VENKATARAMAN : அவ்வளவுதான் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. THANGAVELU : நான் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன். கனம் அமைச்சர் அவர்கள் நான் கோவை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்று குறிப்பிட்டார். என்னுடைய தொகுதி திண்டிவனம் தாலூகா தென் ஆற்காடு மாவட்டத்தில் இருக்கிறது. அங்கே ஒரு நூற்பாலை வைக்கப்படுமா என்றுதான் நான் கேட்டேன்.

26th April 1962]

THE HON. SRI R. VENKATARAMAN : ரொம்பவும் சந்தோஷம். தென் ஆற்காடு மாவட்டத்திலே எங்கே அமைப்பது என்பது பரிசீலனையில் இருக்கிறது.

SRI A. DURAIYARASAN : தஞ்சை மாவட்டத்திலே அரந்தாங்கியில் ஒரு நூற்பாலை வைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு கூட்டுறவு நூற்பு ஆலை வைப்பது என்று சொன்னால் சற்றேறக்குறைய 14 லட்சம் ரூபாய் வசூல் செய்வதற்கு வசதி இருக்கவேண்டும்.

* 8 Q.—SRI P. V. SRIRAMULU : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is a proposal to start a co-operative spinning mill at Krishnagiri, and

(b) if so, the stage at which the matter stands?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) Government have not received any specific proposal to set up a Co-operative Spinning Mill at Krishnagiri. Government are at present examining the possibilities of setting up a few more Co-operative Spinning Mills in the State. The location of these mills will be decided in due course.

SRI P. V. SRIRAMULU : உடனடியாக அங்கு கூட்டுறவு நூற்பாலை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

THE HON. SRI R. VENKATARAMAN : பரிசீலனை செய்யப்படும். அங்கு நிதி எவ்வளவு வசூல் செய்யப்படுகிறதோ அதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

SRI S. MADHAVAN : இந்தக் கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்துவதில் தனியார் துறையில் உள்ளவர்களுக்கு அங்கம் தரப்படுமா ?

(பதில் இல்லை.)

SRI RAMA ARANGANNAL : காஞ்சியில் ஒரு நூற்பு ஆலை ஏற்படுத்த உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒரு நூற் பாலை வைக்க சாங்ஷன் ஆகிவிட்டது.

Election Posters

*9 Q.—SRI M. KARUNANITHI : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேர்தல் சுவரொட்டிகளின்மீது நடவடிக்கை எடுக்குமாறு மத்திய சர்க்காரிடமிருந்து தமிழக சர்க்காருக்கு தகவல் வந்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.